**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

# விலைமனு ஏற்றுக்கொள்ளும் காலத்தை நீடிப்பதற்கான அறிவித்தல்

**இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைத் தனிப்பயனாக்கம் செய்வதற்கான விநியோக அமைப்பு மற்றும் ஏற்புடைய (Public Key Infrastructure - PKI) கூறுகளை கொள்முதல் செய்வதற்காக விலைமனு கோரல்**

## ஒப்பந்த இல: DIE/PRO/PKI/2025

1. **"இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைத் தனிப்பயனாக்கம் செய்வதற்கான விநியோக அமைப்பு மற்றும் ஏற்புடைய (Public Key Infrastructure - PKI) கூறுகளை கொள்முதல் செய்வதற்காக விலைமனு கோரல்"** க்கான விலைமனு சமர்ப்பிப்புக் காலம் 2025 **ஜூலை மாதம்** 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் ஏனைய தகவல்கள் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www. immigration.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

2. ஏப்ரல் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட மூல அறிவிப்பில், தகுதிக்கான அளவுகோல்கள் கீழே உள்ளவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

   **ஒத்த இயல்புடைய ஒப்பந்தத்தில் பெற்றுள்ள விசேட அனுபவம்: 2. ஆ) ii.**

   "விலைமனுதாரர் ஆகக் குறைந்தது இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களுக்கான PKI தீர்வுகளையும் உள்ளடக்கிய இலத்திரனியல் கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல் கருத்திட்டம் ஒன்றை (01) வழங்கியிருத்தல் வேண்டும். அந்தக் கருத்திட்டத்தின் குறைந்தபட்ச பெறுமதி பத்து (10) மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருத்தல் வேண்டும். மேலும் அந்தக் கருத்திட்டம் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னைய ஐந்து (05) ஆண்டுகளுக்குள் நிறைவுசெய்யப்பட்டு அல்லது செயற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அந்தக் கருத்திட்டம் விலைமனுதாரர் மூலம் செயற்படுத்தப்பட்ட விநியோக சேவை கருத்திட்டமாக இருத்தல் வேண்டும்."

3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை **2025 ஜூலை மாதம் 30 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 05 ஆம் மாடி, "சுஹுறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் 2025 **ஜூலை** 30 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்**
**உயர்மட்ட கொள்முதல் குழு, (HLPC)**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**05 ஆம் மாடி,**
**"சுஹுறுபாயா",**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை,**
**இலங்கை.**